செ.வெ.எண்: 271 நாள்: 25.04.2019

# பத்திரிக்கை செய்தி

---

இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009 இன் கீழ் சிறுபான்மையற்ற சுயநிதி தனியார் பள்ளிகளில் எல்.கே.ஜி வகுப்புகளில் 25% மாணவர்கள் சேர்க்க ஏப்ரல் 22 முதல் மே 18 வரை விண்ணப்பிக்கலாம்.

குழந்தைகளுக்கான இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் 2019-20 ஆம் கல்வி ஆண்டின் 25% இட ஒதுக்கீட்டிற்கான மாணவர் சேர்க்கை புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் ஏப்ரல் 22 ஆம் தேதி முதல் இணைய தளம் மூலம் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டு வருகிறது. இணையதளம் மூலம் விண்ணப்பிக்க கடைசி தேதி மே 18 ஆகும்.

சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப்பள்ளிகள் தொடக்க நிலை வகுப்புகள் எல்.கே.ஜி அல்லது 1 ஆம் வகுப்பில் மாணவர்களை சேர்க்க ஏதுவாக மொத்த இடங்களில் 25% இடத்தினை கட்டாய உரிமைச் சட்டம் 2009ன்படி நிரப்புவதற்கு பள்ளியின் தகவல் பலகையில் அறிவிப்பு செய்ய வேண்டும். எல்.கே.ஜி சேர்க்கைக்கு 31.07.2019 அன்று மாணவரின் வயது 3 முடிவடைந்திருக்க வேண்டும். 1 ஆம் வகுப்பு சேர்க்கைக்கு 31.07.2019 அன்று மாணவரின் வயது 5 முடிவடைந்திருக்க வேண்டும்.

பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்), மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினராக இருக்க வேண்டும். சிறப்பு பிரிவினராக இருந்தால் ஆதரவற்றோர், மாற்றுத்திறனாளியாக இருக்கும் குழந்தை, மூன்றாம் பாலினத்தவர், எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்ட குழந்தை, துப்புரவு தொழிலாளியின் குழந்தையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு விண்ணப்பிக்கும் பொழுது உரிய அலுவலரால் வழங்கப்பட்ட சான்றினை பதிவேற்றம் செய்ய வேண்டும். ஆண்டு வருமானம்

ரூ.2 லட்சத்துக்கும் (ரூ.2,00,000) கீழ் பெறும் அனைத்து பிரிவினருக்கும் நலிவடைந்த பிரிவினரின் கீழ் விண்ணப்பிக்கலாம். இதன் பொருட்டு பெற்றோரின் ஆண்டு வருமானச் சான்று சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடம் பெற்று பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

எனவே பெற்றோர்கள் சமுதாயத்தில் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினர் மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட சிறப்பு பிரிவினரின் குழந்தைகளை தாங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையில் உள்ள சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் இருப்பிடச்சான்று, குழந்தையின் புகைப்படச்சான்று, ஆதார்அட்டை அல்லது குடும்ப அட்டை, பிறப்பு சான்று, சாதிச் சான்றினை சம்மந்தப்பட்ட பள்ளிகளில் அளித்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

பள்ளிக் கல்வித்துறையின் http://rte.tnschools.gov.in/tamilnadu இணையதளத்தில் சென்று விண்ணப்பிக்கலாம். இதற்கு எவ்வித கல்விக் கட்டணமும் தனியார் பள்ளிகள் மாணவர்களிடம் பெறக்கூடாது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமா மகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**